**திருமதி.இரா.சங்கீதா,**

**பகுதி நேரமுனைவர் பட்ட ஆய்வாளர்,**

**பிஷப் அப்பாசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி,**

**கோயம்புத்தூர் – 641018.**

**Phone No-9443211495.**

**Mail ID- rsangeethashankar@gmail.com**



# ஆண்டாள் பிரியதர்ஷினி நாவல்களில் பெண்களின் தொழில்கள்

**Abstract:**

As women climb the development ladder in recent times, they have to face many hurdles before reaching their goal of success. Even though women keep crowing about progress, in reality there are many people who block their progress. The purpose of this study is to explain that women are becoming unrivaled in their own development by expressing their individual talents beyond education, work and salary.

**Keywords:** Andal Priyadarshini Novels Women Careers

**ஆய்வுச்சுருக்கம்**

சமீப காலங்களில் பெண்கள் வளர்ச்சிப்படியில் ஏறும்போது வெற்றி இலக்கை அடைவதற்குள் பல தடைகளை சந்திக்க வேண்டி இருக்கிறது. பெண்கள் முன்னேற்றம் பற்றி தொடர்ந்து முழங்கினாலும், நிதர்சனத்தில் அவர்களின் வளர்ச்சிக்கு தடை போடுபவர்களே அதிகமாக உள்ளனர். பெண்கள் படிப்பு, வேலை, சம்பளம் ஆகியவற்றைக் கடந்து தங்களுடைய தனிப்பட்ட திறமைகளை வெளிப்படுத்தி தங்களுக்கு தாங்களே வளர்ச்சியில் ஈடு இணையற்றவர்களாக திகழ்ந்து வருவதனை விளக்கிக் கூறுவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

**திறவுச்சொற்கள்**: ஆண்டாள் பிரியதர்ஷினி நாவல்கள் பெண்கள் தொழில்கள்

## முன்னுரை

பிரெஞ்சுப்புரட்சி தோன்றிய காலகட்டத்தில் பெண்கள் தங்கள் உரிமைகளை மீட்டெடுத்தனர் எனலாம். அக்காலத்தில் பெண்கள் உற்பத்தி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்ததன் காரணமாகவே உழைப்பு, நேர்மை, கூலி, லாபத்தில் பங்கு

முதலானவற்றிற்காக சிந்தனை அவர்களுக்கு ஏற்பட்டு அதன் மூலமாக பெண் தொழிலாளர்களின் இயக்கமாக மாறியதன் தொடர் நிகழ்வுகளே ஆண்களுக்கு நிகரான சமத்துவ உரிமை, பாலியல், சொத்துரிமை முதலானவையாகும். பெண்கள் பணியில் ஈடுபடும் போதுதான் வர்க்க உணர்வை பெறுகிறார்கள் என்றும், அதன் மூலமாகவே ஆண்களுக்கு நிகரான உரிமைகளைப் பெற்றனர் என்றும் அறிஞர்கள் கூறுகின்றனர். அவ்வகையில் பணியிடங்கள் பெண்கள் தங்களை உணர்வதற்கான இடங்களாகக் காணப்படுகின்றன. அங்கு ஏற்படும் நெருக்கடிகளை எதிர்கொள்வதன் மூலம் சமூகத்திற்கு எதிரான தங்கள் குரலை வலுப்படுத்த முடியும் என்று கருதினர். இதன் மூலம் வாழ்வில் முன்னேற முடியும் என்றும் கருதினர்

ஆண்டாள் பிரியதர்ஷினி அவர்களின் நாவல்களில் இடம்பெறும் பெரும்பாலான பெண்கள் பணிகளில் ஈடுபடுகிறார்கள். ஆணுக்கு நிகராக வேலைகளைச் செய்கிறார்கள். அதே நேரத்தில் வீட்டு வேலைகளையும் கவனித்துக் கொள்வது பெண்கள் மட்டுமே என்ற நிலைமைக்கு ஆளாவதைப் பற்றியும் மிக அழகாக இந்நாவல்களில் சுட்டிக் காட்டப்படுகிறது.

விடியும் நேரம் நாவலில் விஜயா துணிக்கடையில் வேலை செய்கிறாள். துணிக்கடை முதலாளி ராணி விற்பனைப் பணியில் ஈடுபடும் பெண்களை படப்பதிவு கருவிகளைக் கொண்டு கண்காணிக்கின்றாள். உரிய கூலியை வழங்காமலும் விளங்குகிறாள். எனினும் குறைந்தபட்ச கூலிக்காகவும் பெண்கள் உழைக்க தயாராக இருக்கின்றனர் என்பது தெளிவாகிறது. விஜயா திருட்டு குற்றம் சுமத்தப்பட்டு வேலையிலிருந்து வெளியேற்றப்படுகிறாள் அப்போதும் அவள் கலங்கிவிடாமல் சொந்தமாக துணிகள் வாங்கி விற்கத் தொடங்குகிறார.; தனக்கான உரிமையை தானே எடுத்துக் கொள்ளும் வகையில் விஜயா நாவலில் திகழ்வதாக ஆசிரியர்; கூறுகிறார்.

> **எனக்கு கிடைக்கும் சுண்டைக்காய் சம்பளத்தில் ஒவ்வொரு மாசத்தையும் கழுத்தைப் பிடித்து தள்ளுவதற்குள் உம்பாடு என்பாடு என்றாகி விடுகிறது உன் பாடு என் பாடு என்றாகி விடுகிறது (வி. நே பக் – 42)**

எனக் குறிப்பிடுகிறார். விஜயா வேலை பார்ப்பதை விட வேண்டும் என்றும், இரண்டாம் திருமணம் செய்து கொண்டு வீட்டு வேலைகளை கவனித்துக் கொள்ள வேண்டும் என்றும் அவளது பெற்றோர்கள் வற்புறுத்துகிறார்கள். அதற்கு அவள் மறுத்து வீட்டை விட்டு வெளியேறுகிறாள். தன் பெற்றோர்கள் பார்த்திருக்கும் இரண்டாவது மாப்பிள்ளை பற்றி அவளது அம்மா

> **மாப்பிள்ளையை பார்த்தா அசந்துருவ ரெண்டு பெத்த ஆண் பிள்ளைன்னு தெரியல.ஆம்பளைக்கு தெரியாதுங்குறது நிஜம்.ஆனா தோல் உசுரத்துக்கு குழந்தைகள் அப்பா அப்பா என்று கூப்பிடுறது நம்பவே முடியல.அவங்கள நல்லபடியாக பார்த்துக்குறது இனிமே உன் பொறுப்பு. பொண்ணு இப்பவோ**

> **அப்பவோன்னு திரண்டு நிற்கிறா...சகலமும் சொல்லித் தர்றதுக்கு வீட்ல பொம்மனாட்டி வேணுமா? அதான் உன்னை கல்யாணம் பண்றாரு.... (வி. நே-பக் 64)**

என்று கூறுவதிலிருந்து பெண் வீட்டு வேலைகளை செய்ய வேண்டும் என்றும், அதற்காகவே ஆண்கள் பெண்களை திருமணம் செய்து கொள்கிறார்கள் என்றும் காட்டப்படுகிறது. பெண்ணின் குடும்பப் பராமரிப்புக்காக எந்த மதிப்பும் தரப்படுவதில்லை அவளது சுயாதீனத்திற்கும் அது கேடான ஒன்றாகவே முடிகிறது. எனவே தான் கதையில் விஜயா அத்தகைய திருமணத்தை மறுத்து வெளியேறுவதாக நாவலின் கதை போக்கினை ஆசிரியர் விளக்கிக் கூறுகிறார்.

சிகரம் சிலந்திக்கு மட்டும் நாவலில் தொலைக்காட்சி தொகுப்பாளினியாக விளம்பர நடிகையாக இருக்கும் காயத்ரி திருமணம் என்ற பந்தத்தையோ கணவன் என்ற உறவையோ எதிர்பார்க்காமல் வாழ்கிறாள். அது அவளது தன்னோக்கமான சுதந்திரத்திற்கு வாய்ப்பாக காணப்படுகிறது. மேலும், குடும்பத்தில் எல்வா வேலைகளையும் பார்த்தாலும் பிரபா வெளிச்சென்று விளம்பரங்களில் நடித்து புகழ் பெறுவது அவளது முன்னேற்றத்தைக் காட்டுகிறது வீட்டு வேலைகள் அவளுடைய சேவையாகவே இருக்கிறது. தமிழ் சமூகத்தில் பெண்கள் வீட்டை விட்டு வெளிச்சென்று வேலை பார்ப்பதே பணி என்ற கருத்து இந்நாவலில் மிகத் தெறிவாக எடுத்துரைக்கப்படுகிறது.

ஆண்டாள் பிரியதர்ஷினி அவர்களும் ஒரு சராசரி தமிழ் பெண்ணையே பாத்திரமாக தந்துள்ளார். அதனால் வீட்டிற்கு வெளியே சென்று வேலை பார்க்கும் பெண்களே தன்னூக்கம் பெற்றவர்களாக இருக்கின்றனர். பிரபாவம் அத்தகையவள்தான் என்பதை அவளது தனி திறமைகளை மறைத்துக்கொண்டு வீட்டு வேலைகளை செய்து வருகிறாள் என்று கூறும் காயத்ரியின் கூற்றினால் தெளிவாகிறது.

> **“இவங்க பிரபா காலேஜ்ல எல்லாத்துலேயும் முதன்மைன்னா இவங்கதான் கதை எழுதுவது, கவிதை எழுதுவது, நாடகம், நடிப்பு, எழுத்து இப்படி சகலகலாவல்லி பெரிய எழுத்தாளரா வருவாங்கன்னு நினைச்சோம்.. ஆமா இப்போ என்ன பண்ற பிரபா?” “சோறு, குழம்பு, காபி, டீ, வீடு பெருக்கறது, துணி துவைக்கிறது, பாத்திரம் கழுவுறது,பையனோட ஆயா இப்படி சகலகலாவல்லி... (சி.சி.எ- பக் -119)**

என்று காயத்ரியும் பிரபாவும் பேசிக்கொள்ளும்போது வீட்டு வேலைகள் தனித்துவம் மிக்கவை என்பது புலப்படவில்லை. மாறாக அது சேவை என்கிற வகையில் குறிக்கப்படுகிறது. ஆனால் வீட்டு வேலைகளையும் தனியாக அங்கீகரித்தால் மட்டுமே பெண் தன் உண்மையை நிலைநாட்டிட முடியும் என்பதை உணரலாம்.

பிரபா விளம்பர நடிகையாக உயர்ந்து பிரபலமாகியவுடன் சம்பாதிக்க ஆரம்பித்தவுடன் அவளை வீட்டு வேலை செய்ய உத்தரவு போட்டுக் கொண்டிருந்த அவளது மாமியார் அவரை மதிக்க ஆரம்பிக்கிறாள் என்பதாக கதை அமைகிறது. இது அவளது தன்னூக்கமிக்க செயல்பாட்டின் அங்கீகாரத்தை வெளிக்காட்டுவதாக அமைகிறது.

சாருலதா என்ற நாவலில் பெண் வேலைக்கு சென்று தன் சொந்த உழைப்பில் சம்பாதிக்கும் போது தான் அவள் தன்னை முழுமையான மதிப்புள்ளவராகக் காட்டுகிறது. பிரேம்குமார் என்கிற பிரபலமான நடிகரின் மனைவியாகப் போவதை சாருலதா விரும்பாதவளாகவும், ஆனால் அதில் தனக்கான உரிமையை தர மறுக்கக்கூடாது என்றும் சாருலதா நாவல் கதை காட்டப்படுகிறது தன்னால் எல்லா வசதிகளும் கிடைக்கப் போகிறதே என்று கூறும் பிரேம்குமாருக்கு பதிலுறையாக

> **“அதைத்தான் சொல்ல வர்றேன் . சின்ன வயசுல இருந்து என்னோட ஒரே கனவு படிச்சு முடிச்சு வேலைக்கு போகணும். கை நிறைய சம்பாதிச்சு அம்மாவுக்கு தரணுங்கறதுதான்.இந்த கல்யாணத்தாலே வீடும் பணமும் கிடைக்கும்.ஆனால் ஒவ்வொரு நாளாய் நினைச்சு ஆசையாய் வளர்த்த என் கனவு நிறைவேறாது...” (சாரு பக்- 46)**

என்கிறாள். இது பெண் தன் சொந்த காலை நிற்பதுதான் தனக்கு சுதந்திரம் என்பதை வெளிப்படுத்துகிறது. தன் உழைப்பு அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதை ஒரு பெண் விரும்புவதாக இந்நாவல் காட்டுகிறது.

கனவுகள் கைப்பிடிக்குள் என்ற நாவலிலும் பெண் படித்து வேலைக்குப் போகும் போது தான் அவளுக்கு சுதந்திரம் கிடைக்கும் என்பது போன்ற கருத்து புலப்படுகிறது தீபா மீனா ஆகியோரின் பாத்திரங்களின் வாயிலாக பெண் தன் சொந்த காலில் நிற்கும் வரை கல்யாணம் செய்து கொள்வதில்லை

> **ரவி என்ன முடிவெடுத்தாலும் பரவாயில்லை. தொழில் சாதனைதான் இப்ப என் மனசுக்குப் பெரிசாப் படுது. கல்யாணம் இல்லை... (க.கை பக்- 87)**

இவ்வாறு மீனாவின் அப்பா அவளை திருமணத்திற்காகக் கட்டாயப்படுத்தும் போதும் கூறுகிறாள்.

> **எனக்கு கல்யாணத்துல கொஞ்சமும் ஆர்வமில்லேப்பா. இந்த தொழில்ல பெரிய ஆள் ஆகணும்.. நம்பர் ஒன்னா இருக்கணும். தொலைக்காட்சி மீடியாவிலே இன்னும் நிறைய சாதனைகள் செய்யணும். அதுக்குள்ள கல்யாணம் விலங்கு மாட்டிக்கிற நினைப்பு எனக்குக் கிடையாது. (க கை பக் -112)**

என்று கூறுகிறாள். இவ்வாறு தொழிலில் ஈடுபாடு காட்டுதல் என்பது ஒரு பெண் தன்னை குடும்பத்திற்கான ஆளாக கருதுவதிலிருந்து தனக்கான தன்னிலையை உணர்தல் ஆணுக்கு இணையான வர்க்க உணர்வு பெறுதல் என்பதாகக் கொள்ளலாம் அந்த வகையில் மீனா என்ற கதாப்பாத்திரம் வர்க்க உணர்வை ஆணிற்கு நிகராக உயரும் விருப்பத்தை கொண்டதாக அமைகிறது

தகனம் நாவலில் வெட்டியான் தொழில் செய்யும் ஆண்களுக்கு நிகராக பெண்களும் வெட்டியான் தொழில் செய்வதாகக் காட்டுவது பெண்ணாலும் இந்த வேலையை செய்ய முடியும் என்றபடி அமைகிறது. ஆண்கள் செய்ய தயங்கும் கடினமான வேலையை அவள் செய்கிறாள் பிணத்தை தோண்டும் வேலைக்கு வேறு ஆண்கள் இல்லை என்பதால் அந்த வேலையை சின்னப்பொண்ணுவைச் செய்ய சொல்கின்றனர்.

> **ஏங்க? வேற யாரு இருக்கா? இருளப்பன் உடம்பு இன்னுந் தேறல்ல. தனவந்தன் மாமியா செத்துடுச்சாம். ரெண்டு நாள் ஆகும். ஊர் திரும்ப நைட் டியுட்டி ஆளுக்கு பேதியாவுதாம். ராத்திரியே வரல்ல. நல்ல வேளை நைட்டு எந்த பொணமும் இல்ல. வந்திருந்தா கதை கந்தலாயிருக்கும் இப்ப நீ தான் பண்ணனும் என்ன சார் எப்பவுமே கஷ்டமான வேலையை என் தலைலதான் கட்டுவீங்க (தக பக்-63)**

என சின்ன பொண்ணு கடினமான வேலைக்கு தயாராக இருக்கின்றாள் சின்னப்பொண்ணு வேலையில் காட்டு வேகம் ஆண்களை விட அதிகமாகக் காணப்படுகிறது. வெட்டியான் தொழில் பற்றிய அவளது கூற்று என்னவென்றால் ஏமாற்றிப் பிழைத்தல், திருடுதல், விபச்சாரம் செய்தல் என்பதெல்லாம்தான் போன்றன மட்டுமே நாரத் தொழில்கள் என்பதாகும். ஆனால் அதற்கு இந்த வெட்டியார் தொழில் எவ்வளவோ மேலானது என்பது சின்னப் பொண்ணுவின் கருத்தாக அமைகிறது.

> **“அட என்ன சார் நீங்க? இந்த நாத்தம்தான் சோறு போடுது எங்களுக்கு பசியும் பட்டினியும் குடலைத் தின்னுச்சுன்னாஎன்ன தொழில் வேணாம் பண்ணலாம். கோலைக்குத்தம், திருட்டு, அவுசாரி இதெல்லாம் தான் நாறத் தொழிலு இது புண்ணிய தொழிலு. என்னா கொஞ்சம் அசிங்கம் பார்க்காம பண்ணனும்**
>
> **(தக பக்-73)**

எனக் கூறுகிறாள் சின்ன பொண்ணு.வர ஆணுக்கு நிகராக தொழில் செய்யும் சின்ன பொண்ணு தன்னுரிமையை நிலை நாட்டுவதாகவே நாவல் முழுவதும் காட்டடப்படுகிறது. பெண்கஎெல்லாம் வெடடியான்; வேலைக்கு வந்துவிட்டால் ஆண்கள் என்ன செய்வது என கதையில் இருவர் பேசிக் கொள்வது இதற்கு சான்றாகும்.

**“பொட்டச்சிங்க கூட வெட்டியான் தொழிலுக்கு வந்தாச்சு. அதுங்க எல்லாம் போட்டி போட்டா ஒன்ன மாதிரி ஆம்பளைங்க என்னத்தச் சம்பாதிச்க? எப்படி குடும்பத்தை காப்பாத்த..?” (தக பக்-16)**

என்று இருளப்பன் சின்ராசுவிடம் கூறுவதாக அமைந்துள்ளது.

**முடிவுரை:**

சமூக பொருளாதார சூழலில் தங்களுக்கேற்ற தொழில் துறையை தேர்ந்தெடுத்து செயல்படும் பெண்களுக்கு வெற்றி காத்திருக்கிறது. பணியிடங்களில் பெண்களை உண்மையில் முன்னேற்ற பாதையில் பார்க்கவேண்டுமெனில், அவர்களுக்கு உரிய மரியாதையை, வாழ்க்கையில் எல்லா நேரங்களில் தருவதே அவசியம். ஒரு ஆணாக இருந்தால் மட்டுமே பணியிடத்திலும் சிறக்கமுடியும் என்பதை மாற்றி திறமைக்கு ஏற்ற முன்னேற்றத்தை பெண்களும் பெற முடியும். இவையெல்லாம் தவிர்த்துவிட்டு, சந்தர்ப்ப சூழ்நிலைக்கு தேவையான முடிவுகளை ஆண், பெண் என்ற பேதம் பாராமல் இணைந்து கூட்டாக முடிவெடுப்பது பணியிடத்தில் சிறந்ததாக இருக்கும். ஆண், பெண் என இருவரும் இணைந்து ஒத்துழைத்து செயல்படுவதே, தொழில், பணியிடம் என்று எல்லாவற்றின் வளர்ச்சிக்கும் வழிவகுக்கும். ஆண்டாள் பிரியதர்ஷினி அவர்கள் பெண்களின் சம உரிமைக்கான விருப்பத்தை கொண்டவர்களாக தொழில் சாதனைகள் புரிந்து வருவதாகக் காட்டப்படுகின்றனர். இவ்வாறாக பெண்கள் எச்சூழலிலும் தம் முன்னேற்றத்தின் முக்கிய அம்சங்களாக தொழில்கள் இடம் வகிக்கின்றன.

**துணைநூற்பட்டியல்:**


1. அரங்க மல்லிகா - தமிழ் நாவல்களில் பெண்ணியம் -நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் 2009
2. அரங்க மல்லிகா பெண்ணின் வெளியும் இருப்பும் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் 2008
3. அரங்க மல்லிகா பதிப்பகம் :நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் தமிழ்ச் சிறுகதைகளில் பெண்ணியம்2008
4. தமிழ் கவிதைகளில்பெண்ணியம் அரங்க மல்லிகா பதிப்பகம் :நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
5. கைலாசபதி, தமிழ் நாவல் இலக்கியம், குமரன் பப்ளிஷர்ஸ், சென்னை, மீள்பதிப்பு, 1999.
6. சுந்தரராஜன், பெ.கோ., சிவபாதசுந்தரம், சோ., தமிழ்நாவல்: நூறாண்டு வரலாறும் வளர்ச்சியும், கிறிஸ்தவ இலக்கிய சங்கம்,1977
7. மாற்றுவெளி ஆய்விதழ் - 5, தமிழ் நாவல் சிறப்பிதழ் ( 1990 – 2010), பரிசல் புத்தக நிலையம், டிசம்பர், 2010.

8. வேங்கடாசலபதி. ஆ.இரா., நாவலும் வாசிப்பும்,காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், 2002.
9. ரிஷியும் மனிஷியும் – கங்கை புத்தக நிலையம்,கசுகூகூ
10. Carli, L.L. and Ealy, A.H. (2001), "Gender, hierarchy, and leadership: an introduction", Journal of Social Issues, Vol. 57 No. 4, pp. 629-36.
11. Daily FT (2017) Sri Lanka needs more women in the workforce, accessed on 23rd of May 2017,
12. Ari, Vivek (2014), Factors affecting career aspirations among married women. Indian Journal of Health &Wellbeing. 2014, Vol. 5 Issue 7, p59-63. 5p.